தமிழ் நாடு சட்டப் பேரவை.

திங்கட்கிழமை, 1970 ஆகஸ்ட் 31.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்--விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்விகள் 135, 136, 137, **138** பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

குடும்ப நலத் துறையின் சில பதவிகள்

* 139 வினா—திரு. நா. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடும்பநலத் திட்டத்திற்கான குடும்பநலத் தகவல் அதிகாரிகளின் பதவிகள் நிரப்பப்பட்டு விட்டனவா?

(இ) மாவட்ட விளம்பர அதிகாரிப் பதவிகள் ரத்தானவுடன் முன்னாள் முதலமைச்சர் அளித்த உறுதிமொழிக்கிணங்க, அப்பதவிகள் நிரப்பப்படுகையில் பழைய மாவட்ட விளம்பர அதிகாரிகளை அப் பதவிகளுக்கு நியமிக்க ஆலோசிக்கப்பட்டதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) ஆம்.

திரு. கே. வினயகம் : ஐயா, இந்த மாவட்ட விளம்பர அதிகாரி களைத் திரும்பவும் வேலைக்கு அமர்த்தும்போது, யாருக்காகிலும், ஏற்கனவே அவர்கள் வாங்கிக்கொண்டிருந்த சம்பளமோ அல்லது வகித்துக்கொண்டிருந்த ஸ்டேடஸ்ஸோ குறைக்கப்பட்டுத் திரும்பவும் வேலையில் வைத்துக்கொண்டபோது, தாழ்வு நிலையில் உத்தியோகம் தரப்பட்டதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மாவட்ட விளம்பர அதிகாரிகளிலிருந்து குடும்ப நலத் திட்டத்தின்கீழ் மாஸ் எஜுகேஷன் இன்பர்மேஷன் ஆபிசர்ஸ் பதவிக்குத் தேர்ந்தெடுக் கும்போது இதற்குத் தகுதியும் திறமையும் உள்ளவர்கள் முதலில் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். ஏற்கனவே என்ன சம்பளம், என்ன நிலைமை கொடுக்கப்பட்டு வந்ததோ அது எந்த வகையிலும் குறைக் கப்படவில்லை. அதே தன்மையில் தரப்படும் நிலைமை மேற்கொள் ளப்பட்டிருக்கிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : விளம்பர அதிகாரிகள் எல்லோருக்குமே மீண்டும் வேலைகள் அளிக்கப்பட்டனவா ? சம்பளம் குறைக்கப்படவில்லை என்று அமைச்சரவர்கள் குறிப்பிட்

டார்கள். என்றாலும், அப்படிக் குறைக்கப்பட்டிருந்தால், ஏற்கனவே அவர்கள் என்ன சம்பளம் பெற்றிருந்தார்களோ அதே சம்பளம் மீண்டும் அவர்களுக்குக் கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, குறைக்கப்படவில்லை என்று குறிப்பிட்டேன்.

These officers were allowed to draw the pay last drawn by them in the Information Department.

அவர்கள் அந்த வேலையைவிட்டு நீக்கப்படுவதற்கு முன்பு என்ன சம்பளம் வாங்கிக்கொண்டிருந்தார்களோ அதே சம்பளம் தரப் படுகிறது என்ற அளவுக்குத்தான் குறிப்பு இருக்கிறது.

திரு. கே. விநயகம் : மாவட்ட விளம்பர அதிகாரிகள், கவர்ன் மென்ட் டூரிஸ்ட் ஹோம் ரிசப்ஷன் அதிகாரி ஆகிய இரு பதவிகளின் தரமும் ஒன்று-தானா ? டூரிஸ்ட் ஹோம் ரிசப்ஷன் அதிகாரியின் தரம் குறைவு அல்லவா ? முன்பிருந்த அதிகாரி வாங்கிக்கொண்டிருந்த சம்பளத்தைவிட இப்பொழுது இருக்கும் அதிகாரி குறைவாக வாங்குகிறார் என்பது அமைச்சரவர்களுக்குத் தெரியுமா ? குறிப்பாக, மதுரையில் இருக்கும் கவர்ன்மென்ட் ரெஸ்ட்ஹவுஸ் அதிகாரியைக் குறித்து நான் கேள்வி போடுகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாவட்ட விளம்பர அதிகாரிகள் நீக்கப்பட்ட பிறகு அவர்கள் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தின் பொதுக் கல்வி–செய்தி அதிகாரியாக எடுத்துக்கொள்ளப்பட்ட தன்மையைக் குறிப்பிட்டேன். குடும்ப நலத் திட்டத்தின்கீழ் அவர்களுடைய சம்பளம் கொடுக்கப் படுகிறது. கவர்ன்மென்ட் டூரிஸ்ட் ஹவுஸ் பற்றியக் கேள்வியை அதற்குரிய அமைச்சரிடத்தில் போட்டால் அவர் பதில் சொல்ல முடியும். குடும்பநலத் திட்டத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட மூவரைக் குறித்துத்தான் நான் கூறிய கருத்துக்கள் இங்கே பயன்படும்.

திரு. ஏ. எம். இராஜா : தலைவர் அவர்களே, மாவட்ட விளம்பர அதிகாரிகளாக இருந்தவர்கள் புதிதாக வேறு பதவியில் நியமிக்கப் பட்டிருக்கிறார்களே அந்தப் பதவி நிரந்தரமானதா, அல்லது டெம்பரரியா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இப்பொழுது வழங்கப்பட்டிருக்கிற பதவிகள் நிரந்தரமான பதவிகளாகும்.

* 140 *Q.*—Thiru K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(*a*) whether the post of Assistant Editor in Family Planning in the Directorate of Health Services and Family Planning was filled up in 1969; and

(*b*) how long that post was kept vacant ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இந்த வேலை சுமாராக இரண்டு ஆண்டு காலம் காலியாக இருந்தது.